

**ENCHANTING MIX**: *A blend of Bharatanatyam and Odissi compositions presented by Ramli Ibrahim and his troupe at the Isha Yoga Centre.*

The Hindu Dec 22, 2006

Dinamalar 13 Dec 06



கோவை வெள்ளியங்கிரிமலை அடிவாரத்தில் இருக்கும் பூண்டி 'ஈஷா யோகா மையத்தில்' நேற்று மலேசிய குழுவினரின் 'மங்கள சரணம்' நாட்டிய நிகழ்ச்சி நடந்தது. இந்திய பாரம்பரியத்தை பிரதிபலித்த இந்நிகழ்ச்சி, பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

Dinamalar 13 Dec 06

# ஈஷா யோக மையத்தில் மலேசிய குழுவினர் நாட்டிய நிகழ்ச்சி

கோவை, டிச. 13 -

கோவை பூண்டி ஈஷா யோக மையத்தில் மலேசிய நாட்டியக்குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி பார்வையாளர்களை கவர்ந்தது.

கோவை வெள்ளிங்கிரி அடிவாரத்தில் இருக்கும் ஈஷா யோகா மையத்தில் நேற்று மலேசியாவின் 'சூத்ரா' நாட்டிய குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி 'மங்கள சரணம்' நடந்தது. சிவன், விஷ்ணு கடவுள்களை சித்தரிக்கும் இந்நாட்டியத்தில் கற்பூராதி ஸ்தோத்திரம், தசமஸா வித்யா போன்ற தாந்திரீக உரைகளில் இருப்பது போல், பல்வேறு பாவனைகளை நடனக் கலைஞர்கள் வெளிப்படுத்தினர். தேவி சக்தியின் வடிவங்களான காளி, தாரா, புவனேஸ்வரி, சோடாஸி, பாகலா, மாதங்கி, பைரவி, கமலா, தூமவதி மற்றும் சிவனின் ஆண்பாதி, பெண்பாதி வடிவமான அர்த்தநாரீஸ்வரரை சித்தரிக்கும் நடனமும், அதை தொடர்ந்து ஆனந்தத்தின் வெளிப்பாடாக 'மோக்ஷியா' நடனமும் நடந்தது.

ஜேன்வாரி லோ, ரேவதி தமிழ்செல்வம், சிவகாம வள்ளி செல்வராஜ், திவ்யா நாயர், குணா, சிவராஜன் நடராஜன் ஆகியோர் அடங்கிய இந்த நடனக்குழுவுக்கு ராம்லி இப்ராகிம் நடன இயக்குனராகவும், கலைநுட்ப இயக்குனராகவும் செயல்படுகிறார். இவர் பாரம்பரிய பாலே நடனங்களையும், இந்திய பாரம்பரிய நடனங்களையும், நவீன நடனங்களையும் சிட்னி நடனக்குழுவினரோடு இணைந்து நடத்தியுள்ளார். இந்நிகழ்ச்சியில் தன்னார்வ தொண்டர்களும், ஈஷா யோகா மையத்தை சார்ந்தவர்களும் ஏராளமான அள்வில் கலந்துகொண்டனர்.

Tamizh Murasu 13 Dec 06



கோவை ஈஷா யோக மையத்தில் இந்திய பாரம்பரிய நடன நிகழ்ச்சி நேற்று நடந்தது. இதில் இடம்பெற்ற மலேசியாவைச் சேர்ந்த சூத்ரா குழுவினரின் நடனம்.

Dinakaran 13 Dec 06



கோவை ஈஷாயோக மையத்தில் இந்திய பாரம்பரிய நடன நிகழ்ச்சி நேற்று நடந்தது. இதில் மலேசியாவை சேர்ந்த ரூத்ரா நாட்டிய குழுவினர் நடனம் ஆடினர்.